வட இலங்கையில்
அதிஉயர்ந்த நவீன ரக
கமரா மூலம் சிறந்த
வீடியோ படப் பிடிப்பிற்கு
—ஜெயபாலனின்—
ராஜா வீடியோ
துர்க்காபுரம்,
தெல்லிப்பளை.

Registered as a newspaper

# உதயன்

விலை ரூ. 1/-

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

மங்களகரமான வைபவங்கள்
மனதில் நிலைபெறச் செய்ய
தத்ரூபமான
புகைப்படங்களுக்கு
-ஜெயபாலனின்-
ராஜா
வீடியோ
துர்க்காபுரம்,
தெல்லிப்பளை.

கடர்:- 2 யாழ்ப்பாணம் அக்ஷய ஸ்ரீ கார்த்திகை மீ 19 உ வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1407 ரபியு ஆகிர் பிறை 02 (05-12-1986) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர்:-8

# விஜே குழுவினர் யாழ் வருவதற்கு பச்சைக் கொடி!

## பாதுகாப்புக்குத் தாமே பொறுப்பு என்று எழுத்தில் கொடுத்தனர்

கொழும்பு, டிசம்பர் 5

திரு விஜயகுமாரணதுங்கவும், பௌத்த குருமாரும், யாழ்ப்பாணத்தில் சிறைபிடிக்கப்பட்டுள்ள சிப்பாய்களின் உறவினர்களும் யாழ்ப்பாணம் செல்வதற்குப் பச்சைக்கொடி காட்டப்பட்டு விட்டது!

தமது பாதுகாப்புக்குத் தாமே பொறுப்பு என்றும் அரச பாதுகாப்புத் தேவையில்லை என்றும் திரு. குமாரணதுங்கா எழுத்தில் கொடுத்தார்.

அதன் பின்னரே அவர் யாழ்ப்பாணம் செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

திரு. விஜேயும் குழுவினரும் இன்று காலை அனுராதபுரத்திலிருந்து புறப்பட்டு யாழ்ப்பாணம் செல்வர்.

இவர்களை வவுனியாவுக்கு அப்பால் செல்லவிடாது தடுக்குமாறு ஆயுதப்படையினருக்கு செவ்வாயன்று உத்தரவிடப்பட்டிருந்தது தெரிந்ததே.

கொழும்பிலிருந்து புறப்பட்ட திரு. விஜயகுமாரணதுங்க தலைமையிலான பௌத்தமத குருமார் குழு புதன்கிழமை நள்ளிரவு அனுராதபுரம் வந்தடைந்தது.

பாதுகாப்புப்படை அதிகாரிகள் திரு விஜயகுமாரணதுங்காவைச் சந்தித்து யாழ் பயணத்தைத் தொடருவதில் உள்ள கஷ்டங்கள்பற்றி எடுத்துச் சொன்னார்கள்.

யாழ் பயணத்தின்போது பாதுகாப்புக்கு உத்தரவாதம் கொடுக்க முடியாது என்றும் பாதுகாப்பு அதிகாரிகள் அவரிடம் தெரிவித்தனர்.

### ஜனாதிபதி தகவல்

தன்னை வந்து சந்திக்கும்படி ஜனாதிபதி அனுப்பிய தகவலும் திரு. விஜயகுமாரணதுங்கவுக்குத் தெரிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா வரை வந்து திரும்பினர்

வவுனியா, டிச. 5

திரு விஜய குமாரணதுங்காவுடன் வந்த பௌத்த குருமார்கள், சிறை வைக்கப்பட்டுள்ள சிப்பாய்களின் பெற்றோர்கள் அனுராதபுரத்தில் இருந்து நேற்றுக் காலை வவுனியா வந்து பின்னர் அனுராதபுரம் திரும்பினர்.

திரு. குமாரணதுங்கா ஜனாதிபதியைச் சந்திக்க கொழும்பு திரும்பிய பின்னர் இவர்கள் இரண்டு மினி பஸ்களில் நேற்றுக் காலை 10. 30 மணியளவில் வவுனியா வந்தடைந்தனர். பின்னர் பௌத்த விகாரைக்குச் சென்று விகாராதிபதியான வண. சியம்பலகஸ்தேவ தேரரைச் சந்தித்தனர்.

''யாழ் விஜயத்தை இத்துடன் நிறுத்துங்கள்

(4ஆம் பக்கம் பார்க்க)

## ஜே. ஆர். வாழ்த்து!

கொழும்பு, டிச. 5

யாழ் விஜயம் வெற்றியாக முடியட்டும் –

இப்படி ஜனாதிபதி ஜெயவர்த்தன ஸ்ரீலங்கா மக்கள் கட்சிச் செயலாளர் விஜயகுமாரணதுங்காவை வாழ்த்தினார்.

யாழ் விஜயம் பற்றிய பேச்சுக்களின் முடிவில் இப்படி வாழ்த்துக் கூறப்பட்டது. (அ–எ–1)

## வவுனியாவில் நேற்று பாதுகாப்பு தீவிரம்

வவுனியா, டிச. 5

வவுனியாவில் நேற்று ஆயுதப் படையினரின் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டிருந்தன.

யாழ் – கொழும்பு போக்கு வரத்துக்கள் அனைத்தும் வவுனியாவில் நிறுத்தப்பட்டு பயணிகள் கீழே இறக்கப்பட்டு துருவித் துருவி விசாரிக்கப்பட்டனர்.

நண்பகல் 12 மணி வரை பாதுகாப்புப்படையினரின் விசேஷ சோதனைகள் நகரெங்கும் நடைபெற்றன.

எனினும் ஸ்ரீலங்கா மக்கள் கட்சி உறுப்பினர்களும், பௌத்த மதகுருமாரும் வவுனியா வுடன் திரும்பிச் சென்றதை அடுத்து படையினர் முகாம்களுக்கு திரும்பிச் சென்றனர். (இ–50)

## சபாநாயகரிடம் மன்னிப்புக்கேட்டார் இஸ்ரவேல் ராஜதந்திரி

கொழும்பு, டிச. 5

நாடாளுமன்ற நடவடிக்கைகளைக் குறிப்பு எடுத்த இஸ்ரவேலிய ராஜ தந்திரி, அதற்காக சபாநாயகரிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டார்.

கொழும்பில் இருக்கும் இஸ்ரவேல் நலன் பிரிவின் தலைவர் திரு. செயிம் டிவொன் மன்னிப்புக் கோரும் கடிதத்தை சபாநாயகர் திரு. இ. எல். சேனநாயக்காவுக்கு அனுப்பியிருந்தார்.

அந்தக் கடிதம் நேற்று நாடாளுமன்றத்தில் சபாநாயகரால் சமர்ப்பிக்கப்பட்டது. கடிதத்தைத்தான் ஏற்றுக் கொண்டதாகவும் சபாநாயகர் சபையில் அறிவித்தார்.

வெளிநாட்டு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடுகள் விவாதம் நடந்த சமயமே இஸ்ரவேல் இராஜதந்திரி திரு. டிவொன் குறிப்புக்களை எடுத்துக் கொண்டிருந்தார்.

இராஜதந்திரிகள் இப்படி குறிப்பு எடுக்கலாமா? என்று அப்போது அத்தனகல்ல எம். பி. திரு. லக்ஷ்மன் ஜெயக்கொடி சபாநாயகரைக் கேட்டிருந்தார். திரு டிவொன் பின்னர் செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில், எமது நாட்டு நாடாளுமன்றத்தில் இப்படி குறிப்புக்கள் எடுக்கலாம். இங்கு அப்படிச் செய்யக் கூடாது என்பது பற்றி எவரும் எனக்குத் தெரிவிக்கவில்லை என்று சொன்னார். (இ–எ)

## வெள்ளைக் கொடி கட்டிய வள்ளத்தில் ஜீ. சி. ஈ. வினாத்தாள்

யாழ்ப்பாணம், டிசம்பர் 5

ஜீ. சி. ஈ. சாதாரணதர பரீட்சை வினாத்தாள்கள் வெள்ளைக் கொடி கட்டிய வள்ளத்தில் நயினாதீவில் இருந்து ஏனைய தீவுகளில் உள்ள பரீட்சை நிலையங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

தீவுப்பகுதி பரீட்சார்த்திகளுக்கான ஜீ. சி. ஈ, சாதாரணதரப் பரீட்சை வினாத்தாள்கள் ஹெலிக்கொப்டர் மூலம் நயினாதீவு இராணுவ முகாமுக்குக் கொண்டு வரப்பட்டிருந்தன.

நயினாதீவு இராணுவ முகாமில் இருந்தே இவை வெள்ளைக்கொடி கட்டிய வள்ளத்தில் ஏனைய தீவுகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டன; (இ–10)

## கிளிநொச்சியில் சிலபரீட்சை நிலையங்கள் இடம் மாற்றம்

யாழ்ப்பாணம், டிச 5

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள சில ஜீ. சி. ஈ. சாதாரண தரப் பரீட்சை நிலையங்கள் இடம்மாற்றப்பட்டுள்ளன.

பெற்றோர்கள், மாணவர்கள், பிரசைகள் குழுவினர் ஆகியோர் விடுத்த வேண்டுகோளை ஏற்று கிளிநொச்சி மாவட்ட கல்விப் பணிப்பாளர் எம். எம். மன்சூர் பரீட்சை நிலையங்களை இடம்மாற்றினார்.

இதன்பிரகாரம் கிளிநொச்சி சென். திரேசா மகளிர் மகாவித்தியாலயத்தில் பரீட்சை எடுக்க இருந்த சென். திரேசா மகாவித்தியாலய, கிளிநொச்சி கனிஷ்ட வித்தியாலய மாணவர்களும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் பரந்தன் இந்து மகாவித்தியாலய பரீட்சை மண்டபத்தில்

(4ஆம் பக்கம் பார்க்க)

வாடிக்கையாளர்களுக்கு ஒரு முக்கிய
அறிவித்தல்
இன்றைய காலகட்டத்தில் உங்களின்
நலன்கருதி
1ஆம் கட்டிடம், நவீன சந்தை
மேல் மாடியில் உள்ள
எமது கிளை நிறுவனம்
05-12-1986 தொடக்கம்
ஸ்ரான்லி றோட்டிற்கு
(V. K. ராஜரட்ணத்திற்கு எதிராகவும்,
விக்ரர் அன் சன்சிற்கு பக்கத்திலும்)
இடம் மாற்றம் செய்யப்பட்டுள்ளது
(இங்கு திருமணக்கூறை, பட்டுவேட்டி
போன்ற சகலவிதமான புடைவைத்
தினுசுகளும் கிடைக்கும்.)
ஹப்பி ரெக்ஸ்ற்
இல: 104, ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.

## மதுரை ரயில்பாதை குண்டுவெடிப்பு: 9 இலங்கையர் கைது! இதில் ஐவர் சிங்களவராம்

மதுரை, டிச. 4

கடந்த 29ஆம் திகதி மதுரை நகர் அருகே உள்ள அழகப்பர் நகரில் ரயில் பாதையில் இடம் பெற்ற குண்டுவெடிப்புச் சம்பந்தமாக 9 இலங்கையர்கள் தமிழ் நாட்டுப் பொலீஸாரினால் கைது செய்யப்பட்டனர்

இச் செய்தியை இந்தியப் பத்திரிகையான 'முரசு' நேற்றைய இதழில் வெளியிட்டிருந்தது.

கைது செய்யப்பட்டவர்களில் நான்கு பேர் தமிழர் என்றும் ஐந்து பேர் சிங்களவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைதானவர்களில் மூன்று பேர் பெண்கள்.

குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டு பொலீஸாரின் தீவிர விசாரணைக்குட்படுத்தப்பட்டிருந்த இந்த ஒன்பது பேரில் ரணசிங்க என்பவர் ஓய்வு பெற்ற பொலீஸ் அதிகாரி எனவும் தெரிய வந்துள்ளது.

இவர்கள் கருணாநிதி நகருக்குக் கொண்டுசெல்லப்பட்டு இரகசியப் பொலீஸாரின் தீவிர விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர். (இ–10)

## பாதயாத்திரை ஆரம்பம்

யாழ்ப்பாணம், டிசம்பர் 5

யாழ் பல்கலைக் கழக மாணவரின்; விஜிதரன் தொடர்பான 5 நாள் பிரசார பாதயாத்திரை நேற்று திட்டமிட்டபடி ஆரம்பமானது.

4 பிரிவுகளாக இப்பாதயாத்திரை ஆரம்பமானது.

தென்மராட்சிப் பகுதியில் பாதயாத்திரை கைதடியிலிருந்தும் —

வடமராட்சிப் பகுதிப் பாதயாத்திரை வல்வெட்டித்துறையிலிருந்தும்—

தீவுப்பகுதிப் பாதயாத்திரை வேலணையிலிருந்தும் —

யாழ்ப்பாண நகரப்பகுதிப் பாதயாத்திரை பல்கலைக்கழகத்திலிருந்தும் ஆரம்பமாகின.

பல்கலைக்கழகத்திலிருந்து புறப்பட்ட பாதயாத்திரை பலாலி வீதி, பொற்பதிவீதி, கோண்டாவில் அன்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## அரசாங்கத்தின் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை

### சு. க. கொண்டுவரும்

கொழும்பு, டிச. 5

அரசாங்கத்துக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவர சிறிலங்கா சுதந்திரக் கட்சி முடிவு செய்துள்ளது.

சர்வசன வாக்கெடுப்பில் நடந்த ஊழல்களை முன்வைத்தே பிரஸ்தாப நம்பிக்கை இல்லாப் பிரேரணை கொண்டு வரப்படும்.

இதே வேளை—

சர்வசன வாக்கெடுப்பில் நடத்தப்பட்ட ஊழல்களைக் கண்டித்து பிரசார இயக்கம் ஒன்றை ஆரம்பிக்க சிறிலங்கா சுதந்திரக்கட்சி மத்திய செயற்குழு முடிவு செய்துள்ளது

இக்கூட்டத்திற்கு திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமை வகித்தார்.

அண்மையில் தேர்தல் ஆணையாளரால் வெளியிடப்பட்ட அறிக்கையில் இந்த ஊழல் சுட்டிக்காட்டப்பட்டிருந்தன.

* ஒரே நேரத்தில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தொலைத்தொடர்பு ஊழியர் படிப்படியாக வேலைக்குச் செல்வர்

யாழ்ப்பாணம், டிச. 5

யாழ் தொலைத்தொடர்பு திணைக்களத்துக்கு நேற்றுமுதல் ஊழியர்கள் படிப்படையாகக் கடமைக்குச் செல்லத் தொடங்கியுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை பண்ணைபொலீஸ் விடுதியில் இருந்து தொலைத்தொடர்பு திணைக்களத்தை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டதை அடுத்து ஊழியர்கள் கடமைக்குச் செல்வதை நிறுத்தியிருந்தனர்.

எனினும் நேற்று கொட்டடியில் உள்ள பொறியியலாளரின் இல்லத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் சில தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

அந்தத் தீர்மானங்கள் வருமாறு:–

இயந்திர அலுவல்களைக் கவனிப்பதற்கு மட்டும் தினமும் பத்து அல்லது பதினைந்து பேர் திணைக்களத்துக்குச்

(4ஆம் பக்கம் பார்க்க)

## பாடசாலைகள் இன்று விடுமுறை

யாழ்ப்பாணம், டிச. 5

அரசாங்க பாடசாலைகள் இன்று 5 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மூன்றாம் தவணை விடுமுறைக்காக மூடப்படுகின்றன.

முதலாம் தவணைக்காக அடுத்த ஆண்டு ஜனவரி 5 ஆம் திகதி பாடசாலைகள் மீண்டும் திறக்கப்படும். (இ–21)

## மன்னாரில் துப்பாக்கிச்சூடு!

மன்னார், டிச. 5

நேற்றிரவு 7 மணி அளவில் மன்னார் மக்கள் வங்கிக் கட்டடத்தில் முகாம் அமைத்திருக்கும் சிப்பாய்கள் நேற்று சரமாரியான துப்பாக்கிப் பிரயோகங்களை மேற்கொண்டனர்.

திடீர் என மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதலினால் மக்கள் பதற்றம் அடைந்தார்கள்.

துப்பாக்கிப் பிரயோகத்தில் ஏற்பட்ட சேத விபரம் பற்றித் தெரியவில்லை. (அ–10)

## சுபநேரம்

05–12–1986

வெள்ளிக்கிழமை

சுபநேரம்:
6 .16 முதல் 7 .46 வரை

ராகுகாலம்:
10.46 முதல் 12.16 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

சதுர்த்தி விரதம்

முச்சந்தி ரேனி



நாங்கள் செய்ய முடியாததை நீராவது செய்து வாரும் என்டு வாழ்த்தியிருந்தால் இன்னும் பொருத்தமாயிருக்கும்.

## வணபிதா பஸ்தியானின் விசாரணை அறிக்கையை மன்னிப்புச்சபை கோருகிறது

லண்டன், டிச. 4

படையினர் நடத்திய தாக்குதலின் போது மன்னாரில் 1985 ஜனவரியில் காணாமல் போனதாகக் கூறப்படும் வங்காலை தேவாலய மதகுரு வணபிதா மேரி பஸ்தியான் சம்பந்தமான பொலீஸ் விசாரணை அறிக்கையை உடனடியாக வெளியிடும் படி சர்வதேச மன்னிப்புச்சபை இலங்கை அரசை மீண்டும் கோரியிருக்கின்றது.

வணபிதா பஸ்தியானின் மரணம் பற்றி கொழும்பு வெகுஜன தொடர்பு நிலையம் கடந்த அக்டோபர் மாதம் வெளியிட்ட அறிக்கைக்கு பதிலளிக்கு முகமாகவே, சர்வதேச மன்னிப்புச் சபை இக்கோரிக்கையை இலங்கை அரசுக்கு அனுப்பியுள்ளது.

இந்த மதகுருவின் மறைவு குறித்து விசாரிக்க பாரபட்சமற்ற சுயேச்சையான விசாரணைக் குழு ஒன்றை நியமிக்கும்படியான தனது கோரிக்கையை சர்வதேச மன்னிப்புச் சபை மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

சர்வதேச மன்னிப்புச் சபை தனது அறிக்கையில் மேலும் கூறியிருப்பதாவது:

வணபிதா பஸ்தியன்

(4ஆம் பக்கம் பார்க்க)

### மட்டக்களப்பில் படையினர் சூடு

## சர்வோதய இயக்க தொண்டர்கள் காயம்

மட்டக்களப்பு, டிச. 5

ஆயுத படையினர் நடத்திய துப்பாக்கிப்பிரயோகத்தில் ஆரியரத்தின தலைமையிலான சர்வோதய இயக்கத்தைச் சேர்ந்த மூன்று தொண்டர்கள் படுகாயமடைந்தனர்.

இச் சம்பவம் மட்டக்களப்பு, கொம்மாதுறையில் நேற்றுக்காலை இடம் பெற்றது.

சுமார் 50 சர்வோதய இயக்கத் தொண்டர்கள், சர்வோதயப் பாடசாலை ஒன்றை அமைப்பதற்காக காணி ஒன்றைத் துப்புரவு செய்து கொண்டு இருந்தனர்.

அச் சமயம் அந்த வீதியால் படையினர் ரோந்து வந்தனர்.

அப்போது நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்திலேயே மூன்று தொண்டர்கள் படுகா

(4ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்று ஜீ. சி. ஈ. ஆரம்பம்:

# பரீட்சை குழப்பப்பட்டால் மீண்டும் நடத்தப்படமாட்டாது

### ஒத்துழைப்புக் கோருகிறார் யாழ் கல்விப் பணிப்பாளர்

யாழ்ப்பாணம், டிச.5

இன்று ஆரம்பமாகும் ஜீ. சி. ஈ. சாதாரண தரப் பொதுப் பரீட்சையில் ஏதும் அசம்பாவிதங்கள், குழப்பங்கள் ஏற்பட்டால் பரீட்சை மீண்டும் நடைபெற மாட்டாது.

கல்வி அமைச்சர் மேற்கண்டவாறு எச்சரித்துள்ளார்.

எனவே சகல பொது மக்களும், நலன்விரும்பிகளும், பெற்றோர்களும் இப்பரீட்சையை எவ்வித குழப்பமும் இன்றி நடத்த உதவுமாறு யாழ் கல்விப்பணிப்பாளர் திரு. இரா சுந்தரலிங்கம் கேட்டுக் கொண்டுள்ளார்.

பரீட்சை சிறப்பாக நடப்பதற்காக ஒவ்வொரு பரீட்சை மண்டபத்துக்கும் விழிப்புக் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

அவர்களுடன் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார். (இ-5)

### ஜீ. சி. ஈ. பரீட்சையில் திருமலை அகதிகளுக்கு விசேஷ அனுமதி கார்ட்

யாழ்ப்பாணம், டிச 5

திருமலையிலிருந்து அகதிகளாக யாழ் மாவட்டம் வந்த ஜீ சி. ஈ. சாதாரண தரப் பரீட்சார்த்திகளுக்கு விசேஷ அனுமதி கார்ட்டுகள் வழங்க பரீட்சை ஆணையாளர் அனுமதி அளித்துள்ளார்.

வெளிமாவட்ட அகதிகள் தங்கள் முறைப்பாடுகளை கல்வித் திணைக்களத்தில் செய்து கொண்டபோதும், திருமலை அகதிகளுக்கே அனுமதி கார்ட்டுகளை வழங்குமாறு; கல்வித் திணைக்களத்திற்கு பரீட்சை ஆணையாளர் ஆணை பிறப்பித்துள்ளார்.

மேலும் இந்த மாணவர்கள் உப அரசாங்க அதிபர்களிடம் சிபார்சுக் கடிதமும்; நிவாரண உணவு உதவிகள் பெற்றதற்கான அத்தாட்சியும் காட்ட வேண்டும்.

அத்தோடு எந்த ஒரு தனியார் நிறுவனத்திலும் கல்வி கற்கவில்லை என உறுதிமொழியும் அளிக்க வேண்டும் என பரீட்சை ஆணையாளர் தெரிவித்துள்ளார். (இ-5)

### தேர்தல் ஆணையாளர் அறிக்கையை சிறிமா றேகனுக்கு அனுப்புவாராம்

கொழும்பு, டிச. 5

இலங்கை அரசின் ஜனநாயகக் கொள்கைகளைப் பற்றி புகழ்ந்துரைத்த அமெரிக்க அதிபர் றேகனுக்கு அண்மையில் வெளியிடப்பட்ட தேர்தல் ஆணையாளரின் அறிக்கை அனுப்பி வைக்கப்படும்

இப்படி சுதந்திரக்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தெரிவித்தார்.

சர்வஜன வாக்கெடுப்பில் நடைபெற்ற ஊழல்கள் பற்றி அந்த அறிக்கையில் தேர்தல் ஆணையாளர் விவரித்துள்ளார்.

சுயேச்சையான அரச அதிகாரி ஒருவரே இந்த அறிக்கையைத் தயாரித்திருக்கிறார்.

சர்வஜன வாக்கெடுப்பில் ஊழல்கள், காடைத்தனம், தலையீடு முதலியன இடம் பெற்றதாக அவரே அறிக்கையில் குறிப்பிட்டிருக்கின்றார்.

இந்த அறிக்கையை அமெரிக்க அதிபர் றேகன் வாசித்துப் பார்த்தால் இலங்கையில் ஜனநாயகம் இருக்கிறதா என்பது தெரியவரும்.

இப்படி சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி பண்டாரநாயக்கா தெரிவித்திருக்கிறார். (இ-எ)

### இலவசம்

யாழ்ப்பாணம், டிச. 5

கோயில்களில் நட்டு உண்டாக்குவதற்கான வில்வை, கடம்பு மரக்கன்றுகளை யாழ்ப்பாணம் மில்க்வைற் ஸ்தாபனத்தார் இலவசமாக வழங்குகிறார்கள்.

தேவையானோர் விண்ணப்பம் செய்து பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

### அதிஷ்ட லாபச் சீட்டு

மானிப்பாய், டிச 5

சாரணர் குழுக்களுக்குரிய விசேட திட்டமாக ஓர் அதிஷ்ட லாபச் சீட்டு நடைமுறைப்படுத்தப்படும்.

இந்த அதிஷ்ட லாபச் சீட்டின் மூலம் அதிக சீட்டுகளை விற்பனை செய்யும் சாரணர் குழுவுக்கு ஐயாயிரம் ரூபா பெறுமதியான கூடாரத்தை பரிசாக வழங்குவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது. (இ-90)

### இராண்ட்பாஸில் நடந்த படுகொலைகள்

கொழும்பு, டிச. 5

கொழும்பு, கிராண்பாஸில் உள்ள நகைக்கடை உரிமையாளர் ஒருவரின் மனைவி, அவரின் தங்கையின் இரண்டு குழந்தைகள் (வயது10, 11) ஆகியோர் புதன் கிழமை இனந் தெரியாதோரால் வெட்டிக் கொல்லப்பட்டனர்.

அனைவரும் சிங்களவர்.

வீட்டில் இருந்த பொருள்கள் கொள்ளை இடப்பட்டன.

கொல்லப்பட்ட குழந்தைகளின் சடலங்கள் கிணறு ஒன்றினுள் இருந்து மீட்கப்பட்டன.

சம்பவம் நடந்த சமயம் உரிமையாளரான கணவன் வீட்டில் இருக்கவில்லை. (இ-எ)

## செய்திக்கொத்து

### வடக்கு கிழக்குக்கு 500 சிப்பாய்கள்

மட்டக்களப்பு, டிச. 5

மாதுறு ஓயா இராணுவ முகாமில் பயிற்சியை முடித்துக் கொண்டு வெளியேறிய 500 இராணுவ வீரர்கள் வடக்கு — கிழக்குப் பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். (இ - 21)

### சுகாதார விழா

சாவகச்சேரி, டிச 5

தென்மராட்சிப் பகுதி ஆரம்ப சுகாதார கவனிப்பு நிலையங்களின் ஒன்றிணைந்த சுகாதார விழா சாவகச்சேரி மகளிர் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

செல்வி சபாரத்தினம் தலைமையில் ஆரம்பமான இவ்விழாவில் டாக்டர் திரு. த. சிங்கராசா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

வைத்திய அதிகாரி திரு. ரி.C சாமசுந்தரம், டாக்டர் திரு எஸ். கருணானந்தம், டாக்டர் கே நடராசா, லயன்ஸ் தலைவர் டாக்டர் பே. பிலிப் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகப் பங்கு பற்றி உரையாற்றினர். (இ - 31)

### கட்டுரைப் போட்டி

மானிப்பாய், டிச. 5

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் குருபூசையையொட்டி அகில இலங்கை ரீதியில் கட்டுரைப் போட்டி ஒன்றை நடத்த சங்கு வேலி இந்து மன்றம் முன் வந்துள்ளது. (இ - 90)

### வரவேற்பும் பிரியாவிடையும்

வேலணை டிச. 5

வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய முகாமையாளர் திரு. வே. செல்லத்துரைக்கு வரவேற்புபசார விழாவும், இது வரை காலமும் வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் பொது முகாமையாளராகக் கடமையாற்றி மாற்றலாகிச் சென்றுள்ள இரா லோகநாதனுக்கு பிரிவுபசார விழாவும் அண்மையில் சங்க மண்டபத்தில் சங்கத் தலைவர் திரு. வி. சிவராஜா தலைமையில் நடைபெற்றன. (இ - 167)

### எந்த ஒரு தொழிலுக்கும் கல்வி அவசியமானது

வட்டுக்கோட்டை, டிச.5

கிராமங்களிலுள்ள சகல மக்களும் கல்வி அறிவு பெற்றுக் கொள்ள வேண்டும். எந்த ஒரு தொழிலைச் செய்வதற்கும் அறிவு அவசியமானது. இந்த அறிவைப் பாடசாலைகளில் மாத்திரமன்றி நூல் நிலையங்கள், வாசிகசாலைகள் மூலமும் பெற்றுக் கொள்ளலாம்.

வட்டுக்கோட்டை கிழக்கு சித்தன்கேணியில் ஜனசக்தி சனசமூக நிலையத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்து உரையாற்றிய வட்டு கிழக்கு கிராம சேவையாளர் திரு. ஆ. முருகேசு மேற்கண்டவாறு கூறினார்.

விநாயகர் கிராம நல்லொழுக்கச் சபைத் தலைவர் திரு. க. கதிரமலை தலைமையில் வைபவம் நடைபெற்றது.

திரு. ஆ. முருகேசு தொடர்ந்து உரையாற்றும் போது;

சனசமூக நிலையங்களை ஆரம்பித்தால்மாத்திரம் போதாது. அவற்றைப் பேணிப் பாதுகாப்பதோடு கிராம மக்களுக்கு அவை பயனுள்ளவையாக உருவாக்கப்பட வேண்டும் என்றார்.

சனசமூக நிலைய உத்தியோகத்தர் திரு. அ. விஜயநாதன் உட்பட மற்றும் பலரும் உரையாற்றினர். (இ-161)

### இமையாணன் வீதி வாய்க்கால் திருத்தும் பணி ஆரம்பித்து வைக்கப்பட்டது

வல்வெட்டித்துறை, டிச5

இமையாணன் வீதி வாய்க்கால் திருத்தும் வேலை ஆரம்பமாகியது.

இமையாணன் கிராமத்தில் உள்ள பிரதான வீதியான 750 பஸ் போக்குவரத்து வீதி வாய்க்காலே திருத்தப்படுகிறது.

கிராம மக்களும் இளைஞர் சேவை மன்றமும் இணைந்து இப்பணியில் ஈடுபடுகின்றனர்.

இது தொடர்பான வைபவத்தை யாழ். அபிவிருத்திச்சபை உப அலுவலகம் உடுப்பிட்டி அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு. என். பேராசிரியன், தொழில் நுட்ப அதிகாரி திரு. கே. சிவஞானசுந்தரம், நிஸ்கோ மாவட்ட முகாமையாளர் செல்வி. எஸ். மகேஸ்வரி, திரு. அப்புக்குட்டி, செல்வன் ஸ்ரீ ரவீந்திரநாதன், எஸ். அருந்தவச்செல்வம் ஆகியோர் ஆரம்பித்து வைத்தார்கள் (இ - 160)

### கைலாசபதி நினைவு தினம்

யாழ்ப்பாணம், டிச. 5

பேராசிரியர் க. கைலாசபதியின் 4ஆவது நினைவுக் கூட்டம் 7ஆம் திகதி ஞாயிறு மாலை 5 மணிக்கு புத்தூர் வேம்பிராய் கைலாசபதி நூலக மண்டபத்தில் நடைபெறும்.

கலைமதி சனசமூக நிலையத் தலைவர் கா கதிர்காமநாதன் தலைமை வகிப்பார்.

#### நல்லூரில்

பேராசிரியர் க. கைலாசபதியின் நான்காவது நினைவுதினக் கூட்டம் எதிர்வரும் சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் இந்து விடுதியில் நடைபெறும். திரு. இ. முருகையன் தலைமை வகிப்பார். (இ-எ-5)

### தென்னை உரம் கையிருப்பில்

யாழ்ப்பாணம், டிச. 5

தென்னை மர வளர்ப்புக்குத் தேவையான உர வகைகள் தற்பொழுது கையிருப்பில் உள்ளன.

நல்லூர் கமத்தொழில் சேவை நிலையத்திலும் நெல்லியடி கமத்தொழில் சேவை நிலையத்திலும் தென்னை உரத்தைப் பெற்றுக் கொள்ளலாம் என யாழ் அரச அதிபர் தெரிவித்துள்ளார். (இ-10)

### 2 கிணறுகள் வெட்டியும் நெடுந்தீவில் குடி தண்ணீர் தட்டுப்பாடு

யாழ்ப்பாணம், டிச.5

யாழ் திட்டமிடல் பணியகம் நெடுந்தீவில் இரு கிணறுகளை வெட்டிக் கொடுத்தும் குடி தண்ணீர் தட்டுப்பாடு நிலவுகிறது.

தண்ணீரை விநியோகிப்பதற்கென திட்டமிடல் பணியகத்தால் கொடுக்கப்பட்ட 8 தாங்கிகளும் நெடுந்தீவு சேராததே இதற்குக் காரணம்.

நெடுந்தீவு ப. நோ. கூ. சங்கம் தாங்கிகளை கொண்டு செல்வதற்காக; கேள்விப் பத்திர அடிப்படையில் ஒப்பந்தம் செய்திருந்தது.

உடன் தாங்கிகளை நெடுந்தீவுக்கு கொண்டு செல்லும்படி பணியகம் கூட்டுறவுச் சங்கத்தினை பணித்துள்ளது.

நெடுந்தீவில் தற்போது ஒரு குடம் குடி நீர் இரண்டு ரூபாவிற்கு விற்கப்படுகிறதாம். (இ-5)

## மாநிலம்-மாவட்டம்-உள்ளூர்

### பால் கொடுத்தும் பணம் இல்லையே

#### கிளிநொச்சி உற்பத்தியாளர் கவலை

கிளிநொச்சி, டிச. 5

கிளிநொச்சியில் இயங்கி வந்த பால்சபைக்குச் சொந்தமான பாலைபைக் கட்டில் அடைக்கும் தொழிற்சாலைக்கு கூட்டுறவு பால் சங்கத்தினூடாக பால் வழங்கியவர்களுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லையாம்.

பால் உற்பத்தியாளரிடம் கூட்டுறவு பால் சங்கம் பாலைக் கொள்வனவு செய்து பால் சபைக்கு விநியோகித்து வந்தது.

பால் சபையிடம் இதற்கான பணம் பெற்று கூட்டுறவு பால் சங்கம் பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்குவது வழக்கம்.

கடந்த ஏப்பிரல்மாதம் முதல் ஜூன்மாதம்வரை பால் சங்கத்திடமிருந்து பால் சபை கொள்வனவு செய்த பாலுக்குரிய பெறுமதி சுமார் 3 லட்சம் ரூபா இதுவரை பால் சபையால் பால் சங்கத்திற்கு வழங்கப்படவில்லை.

இதனால் பால் சங்கம் கொள்வனவு செய்த பாலுக்குரிய பணத்தை பால் உற்பத்தியாளருக்கு வழங்க முடியாதிருப்பதால் சுமார் 150 பால் உற்பத்தியாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்

பால் சபையோ இப்பணம் அமைச்சிடமிருந்துதான் பெற்றுத் தர வேண்டும் என பால் சங்கத்திற்கு கைவிரித்துள்ளதாம். (இ-76)

### கிழக்கு மாகாண இனவிகிதாசார அறிக்கையில்

# இடம் பெயர்ந்த தமிழர் எண்ணிக்கை சேர்க்கப்படவில்லை

கொழும்பு, டிச.5

தற்போது இலங்கை அரசு தயாரித்துள்ள கிழக்கு மாகாணத்தின் இன விகிதாசார அறிக்கையில் வன்செயலால் இடம் பெயர்ந்த தமிழர்களின் எண்ணிக்கை சேர்க்கப்படவில்லை.

ஆனால் உடனுக்குடன் குடியமர்த்தப்பட்டுவரும் சிங்கள மக்களின் எண்ணிக்கை அந்த அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளது என்று கூறப்படுகிறது.

இதுபற்றி அரசாங்க உயர்மட்டத்துக்கு முறையிட கிழக்கிலங்கை அரசாங்கக் கட்சி அரசியல்வாதிகள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர் என்று தெரிய வருகிறது.

கிழக்கிலங்கையை மூன்று மகாணசபைகளாகஇனரீதியில்பிரிக்கும் யோசனையை பெங்களூரில் இலங்கை வெளியிட்டது தெரிந்ததே.

அதன் பின்னர் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் தேவநாயகம் மட்டக்களப்பு, திருமலை, அம்பாறை அரச அதிபர்களுக்குஅனுப்பிய தொலைபேசி உத்தரவில் இனவிகிதாசாரம் பற்றிய அறிக்கைகளைச் சமர்ப்பிக்கும்படி கேட்டிருந்தார்.

அந்த அறிக்கைகளில் தான் மேற்கண்ட முரண்பாடுகள் இருக்கின்றன என்பது தெரியவந்துள்ளது. (இ-எ-21)

### உங்களுக்குத் தெரியுமா?

சவர்க்காரங்கள் எல்லாமே எரிசோடாவும் தேங்காய் எண்ணெய்யும் கலந்துதான் தயாரிக்கப்படுகின்றன. ஆனால் ஒரு நல்ல சலவை சவர்க்காரத்தில் எஞ்சிய எரிசோடாவாக (Free caustic Alkalie) 0.02 வீதத்திற்கு மேல் இருத்தல் கெடுதலானது. துணிகளில் அழுக்கை அகற்றுவது சவர்க்காரத்தின் நுரையேயன்றி எரிசோடாவாக இருக்கக் கூடாது. மிதமிஞ்சிய எரிசோடா அழுக்கை துரிதமாக அகற்றும். ஆனால் கைகளுக்கும் துணிகளுக்கும் கெடுதலை ஏற்படுத்தும்.

கைகளில் எரிவை ஏற்படுத்துவதும் இலகுவில் கழுவுப்படாது இருத்தலும் மிதமிஞ்சிய எரிசோடாவின் அறிகுறி.

சிறிதளவு சவர்க்காரத்துடன் பெரிய அளவில் நுரையைத் தருவதும் கைகளுக்கு மென்மையாக இருத்தலும், அழுக்கை அகற்றுவதில் மேன்மையானதும், இலகுவில் கழுவுப்படுதலுமே நல்ல சவர்க்காரத்தின் பண்புகள்.





விளம்பரம்

### கோட்டை முகாமை அகற்றக்கோரி ஜனாதிபதிக்கு மகஜர்

ஊர்காவற்றுறை, டிச.5

கோட்டை முகாமையும் அதனோடு ஒட்டி அமைந்துள்ள மண்டைதீவு பண்ணை முகாமையும் மூடி தீவுப்பகுதி மக்களின் போக்குவரத்திற்கு ஏற்ற நடவடிக்கைகளை எடுக்குக.

ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவிற்கு இவ்வாறு மகஜர் ஒன்று அனுப்பப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை பிரசைகள் குழு இந்த மகஜரை அனுப்பி உள்ளது.

பண்ணை ஊடாக பாதைப் போக்குவரத்து தடைப்பட்ட காலம் தொடங்கி தீவுப்பகுதியை உள்ளடக்கிய அனலைதீவு, புங்குடுதீவு, நயினாதீவு, எழுவைதீவு நெடுந்தீவு, ஊர்காவற்றுறை மக்கள் படும் கஷ்டங்களும் குறிப்பாக மாணவர்கள் அரச உத்தியோகத்தர்கள், வர்த்தகர்கள், விவசாயிகள் கஷ்டங்களும் இம் மகஜரில் விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன. (இ-16)

### தம்பிலுவிலில் கொள்ளை

மட்டக்களப்பு, டிச.5

தம்பிலுவில் மகாவித்தியாலய விஞ்ஞான ஆய்வு கூட அறை இனந்தெரியதோரால் கடந்த திங்கள் இரவு உடைத்துக் கொள்ளை இடப்பட்டது. (இ-எ-21)

### வவுனியாவில் கடத்தல்

கொழும்பு, டிச.5

வவுனியா, குருமண்காடுச் சந்தியில் வைத்து ரஞ்சித் பெர்னாண்டோ என்பவர் இனந்தெரியாதோரால் கடத்திச் செல்லப்பட்டார். (இ-ஐ-எ)

### 167 போருக்கு கண்ணாடிகள்

காங்கேசன்துறை. டிச.5

மாவை லயன்ஸ் கழகம் மயிலிட்டியில் நடத்திய கண் பரிசோதனையில் 167 பேருக்கு இலவச கண்ணாடிகள் வழங்கப்பட்டன. 86 பேருக்கு இலவச கண்சிகிச்சை செய்யப்பட்டது. (இ - 68)


## பிரயாண ஒழுங்குகள்

★ சவூதி அரேபியா ★ சிங்கப்பூர் ★ குவைத் ★ ஜேர்மனி ★ லண்டன் U.K. ★ நோர்வே

1. சவூதி அரேபியாவுக்கு (Open Visa) தொழில் வாய்ப்புடன் உடனடி பிரயாணம் மேற்கொள்ள விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும்
2. சிங்கப்பூர் தொழில் வாய்ப்புடன் செல்லவிரும்பும் பெண்கள் உடன் தொடர்பு கொள்ளவும்
3. குவைத் குவைத் டிறைவிங் லைசென்ஸ் உள்ளவர் உடனடியாக தொடர்பு கொள்ளவும்.
4. ஜேர்மனி - லண்டன் செல்ல விரும்புவோரும் உடன் தொடர்பு கொள்ளவும்.

(குறிப்பிட்ட வெற்றிடங்கள் மட்டும் உண்டு)

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

TRI STAR TRAVELS

றை ஸ்ரார் றவல்ஸ்

No. 6, நவீன சந்தை மேல்மாடி.

தொலைபேசி இல: 23831

மு.கு: யாழ்நகர் நிலைமை சீரற்று, எமது அலுவலகம் மூடப்பட்டிருப்பின் கீழ் வரும் முகவரிகளில் தொடர்பு கொள்ளவும்.

71, குருசோ வீதி, (சுண்டுக்குளி) யாழ்ப்பாணம்.

வே. குகராஜா, மயிலியதனை கந்தசாமி கோயிலடி, அராலி வடக்கு.

N. தயாளன், மயிலணி வடக்கு, சுன்னாகம்.



1964ஆம் ஆண்டு றெக்கிளமேசன் சனசமூக நிலையத் தலைவராக இருந்த

அமரர் சவிரிமுத்து செபஸ்ரியாம்பிள்ளை (பிரான்சிஸ்)

ஞாபகார்த்தமாக குருநகர் றெக்கிளமேசன் சனசமூகநிலையம் நடத்தும்

பொது அறிவுப்போட்டி

விவரங்கள் நாளைய சஞ்சீவியில்---



## காணவில்லை

துரைசிங்கம் மங்கையர்க்கரசி ஆகிய எனது 515414320 X இலக்கமுடைய அடையாள அட்டை 30 - 11 - 86 அன்று கொழும்பில் இருந்து வந்த மினி பஸ்ஸில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஸ்ரீ மகள் ரேடர்ஸ், யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

எனது அடையாள அட்டை வாகன அனுமதிப்பத்திரம்,காசோலை, வேறுசில முக்கிய தஸ்தாவேஜுக்கள் ஓர் உறையினுள் வைத்த வண்ணம் ஊரெழுவுக்கும் திருநெல்வேலிக்கு மிடையில் பலாலி ரேட்டில் 3.12.86ல் தவறிவிட்டது. தயவு செய்து மேற்படி பொருட்களை கண்டெடுத்தால் கீழே உள்ள விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். ம. செல்வகுமாரன், ஊரெழு பாம், சுன்னாகம்.

## விற்பனைக்கு

Rice Cooker, Cooler etc. விற்பனைக்கு உண்டு. முகவரி: Mrs. Ampihaipalan, 'Ratna Mahal', Main Street, Chankanai East. Chankanai.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### உதய சங்கற்பம்

நாம் செய்யும் கர்மாக்களே இந்த பூலோகத்திலும் பலன் அளிக்கும் - பரலோகத்திலும் பலன் அளிக்கும்.

– புத்தபிரான்

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை
இல.15 2ஆவது ஒழுங்கை மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி: 24805 22073
05-12-1986 த.பெ இல.83

## அமெரிக்காவில் ஓர் உலுப்பல்!

ஈரானுக்கு ஆயுதவிற்பனை செய்தது அதன் மூலம் கிடைத்த பணத்தை நிக்ரகுவா வலதுசாரிக் கிளர்ச்சியாளர்களுக்குக் கொடுத்தது.

அமெரிக்க அரசாங்கம் - அரசாங்க நிர்வாகம் இவை இரண்டையும் இரகசியமாகச் செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறது

இந்த மோசடி அமெரிக்க நிர்வாகத்தைப் பெரும் குலுக்குக் குலுக்கி இருக்கிறது. அமெரிக்க நாட்டையே உலுப்பி விட்டது. அதற்கு உலக அரங்கில் பெரும் அபகீர்த்தியைத் தேடிக் கொடுத்திருக்கிறது.

இந்த மோசடி குறித்து அமெரிக்க மக்களே அதிருப்தியும் கவலையும் தெரிவித்து இருக்கிறார்கள். றேகன் நிர்வாகம் மீது மக்கள் அபிமானம் 60 சதவீதம் உடனடி வீழ்ச்சி கண்டிருக்கிறது. மதிப்பீட்டுப் புள்ளிவிவரங்கள் இதனைத் தெரிவித்திருக்கின்றன.

உலகநாடுகளையும், அமெரிக்க மக்களையும் விட மோசடி குறித்து அதிகம் கொதிப்படைந்திருப்பவர்கள் அமெரிக்க மக்கள் பிரதிநிதிகள் (காங்கிரஸ்) சபையினரும் மூதவை (செனட்) உறுப்பினர்களும்தான்.

அவர்கள் ஆத்திரமடைவதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. நிக்கரகுவாக் கிளர்ச்சியாளர்களுக்கு நிதி உதவி வழங்க அதிபர் றேகன் முனைந்த போதெல்லாம் காங்கிரஸும் செனட்டும் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்த வண்ணம் இருந்தன.

அதிபர் றேகன் நிக்கரகுவா கிளர்ச்சியாளர்களுக்கு பெருந்தொகை ஒதுக்கும் போதெல்லாம் அதனை வெட்டிக் குறைத்து வந்தவர்கள் காங்கிரஸ், செனட் உறுப்பினர்கள்.

அதனால்—

உத்தியோகபூர்வமாக வழங்க முடியாத உதவியை, கள்ளத்தனமாக வழங்க மேற்கொள்ளப்பட்ட ஓர் அசல் மோசடியே ஈரான் ஆயுத விற்பனை - நிக்கரகுவா உதவி விவகாரம் எனக் கருதப்பட வேண்டியுள்ளது.

மக்கள் பிரதிநிதிகள் அங்கீகரிக்காத ஒரு விவகாரத்தை அதிபர் றேகன் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி, சட்ட விரோதமாக இந்த மோசடியைச் செய்திருக்கிறார் என்றும் கூறலாம்.

ஈரானை ஒரு பயங்கரவாத நாடு என்று வர்ணித்து வந்த அமெரிக்கா, எப்படி அந்த நாட்டுக்கு ஆயுதங்களை விற்பனை செய்ய முடியும் என்பதும் அமெரிக்க அரசியல்வாதிகள், மக்கள் எழுப்பியுள்ள கேள்வியாகும்.

இந்த மோசடியை, முன்னர் நிக்ஸன் காலத்தில் இடம்பெற்ற வாட்டர் கேட் ஊழலுக்கு சமமானதாகவே அமெரிக்கர்கள் கருதுகிறார்கள்.

வாட்டர்கேட் விவகாரமும் நிக்ஸன் ராஜினாமாவும் அமெரிக்க அண்மைக் கால அரசியல் வரலாற்றில் பெரிய கறுப்புப்புள்ளிகளாகக் கருதப்பட்டன.

மக்கள் அதிருப்தியை அறிந்து, ஏற்கனவே நொண்டி வாத்தாகி விட்ட றேகன் இம்மோசடி குறித்து சுயேச்சையான விசாரணையை நடத்த உத்தரவிட்டிருக்கிறார். விசாரணை நடத்தவிருக்கும் ஆணையாளரை உயர் நீதிமன்றமே நியமிக்க இருக்கிறது.

அதன் பின்னரே வாட்டர்கேட் ஊழலை விசாரித்த இரு மக்கள் சபைகளினதும் பிரதிநிதிகளைக் கொண்ட தெரிவுக்குழு போன்ற ஒன்றினை நியமிக்கும் நிலை உருவாகலாம்.

வாட்டர்கேட்டில் விசாரணைக் குழு தண்டனை குறித்து அறிவிக்கு முன்னரே நிக்ஸன் பதவியை ராஜினாமாச் செய்தார்.

இப்போது தெரிவுக் குழு நியமிக்கப்படுவதற்கு முன்னரே றேகன் ராஜினாமாச் செய்துவிடுவாரோ!

றேகன் மட்டுந்தான் ஊழலில் ஈடுபட்டார் என்று எண்ணிவிடலாகாது. ஒவ்வொரு நாட்டின் ஆட்சிபீடத்தில் உள்ளவர்களும் ஏதோ ஒருவிதமான ஊழலில் ஈடுபடாமல் இல்லை.

மக்கள் வைத்த நம்பிக்கைக்கு விரோதமாக தனது சொந்த விருப்பு வெறுப்புகளை எய்த எண்ணும் ஆட்சியாளரைத் தூக்கி எறிய வேண்டும்.

அமெரிக்கச் சட்டத்துக்கும் மக்களுக்கும் உள்ள துணிவு ஏனைய நாட்டு மக்களுக்கும் சட்டங்களுக்கும் இல்லையா? இந்த நாட்டில் அது துப்புரவாக இல்லை என்பது மட்டும் சர்வ நிச்சயம்!

## சிறுவர் நூலக பிரிவு ஆரம்பிக்க முடிவு

மானிப்பாய் டிச.5

மாவட்ட அபிவிருத்திச் சபையின் உடுவில் உப அலுவலகத்தால் நடத்தப்படும் நூல் நிலையத்தில் 1987ஆம் ஆண்டு முதல் சிறுவர் நூலகப் பிரிவு ஒன்று ஆரம்பிக்கப் பட உள்ளது

இப்பிரிவுக்கான நூல்கள், தளபாடங்கள் வாங்குவதற்காக 10ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. நூலகத்துக்கென 35 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டிருக்கிறது.

உடுவில் உபஅலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு. இ. கணேஸ்வரன் இதனைத் தெரிவித்தார்.

நூல் நிலையத்தின் வளர்ச்சி, முன்னேற்றம் பற்றிய ஆலோசனைக்கூட்டத்தில் உரையாற்றிய போதே அவர் இதனை தெரிவித்தார். (இ-90)

# இந்திய கடற்படை பலம் அதிகரிப்பு

புதுடில்லி, டிச. 4

இந்திய கடற்படையின் பலம் அதிகரிக்கப் பட்டுள்ளது.

கடற்படையின் நீர்மூழ்கிக் கப்பல் அணியில் மேலும் இரண்டு நீர்மூழ்கிக் கப்பல்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

கங்கா, ரஞ்சி ஆகியவையே புதிதாகச் சேர்க்கப்பட்டு உள்ள நீர் மூழ்கிக் கப்பல்களாகும்.

ஏற்கனவே இந்த அணியில் மூன்று நீர் மூழ்கிக் கப்பல்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

இக்கப்பல்களில் சோவியத் ஏவுகணைகள் பொருத்தப்பட்டுள்ளன.

இதனால் தாக்கும் திறன் அதிகரிக்கப்பட்டுள்ளது கப்பல்கள், நீர்மூழ்கிக் கப்பல்கள் ஆகியவற்றைத் தாக்கக் கூடிய வல்லமை சோவியத் ஏவுகணைகளுக்கு உண்டு.

இதனிடையில் நேற்று இந்தியக் கடற்படைத் தினம் அனுட்டிக்கப்பட்டது. (இ-எ)

### பஞ்சாபில் ராணுவம் தயார்

புதுடில்லி, டிச 4

பஞ்சாப் மாநிலத்தில் நிலைமை மோசமடையும் பட்சத்தில் பாதுகாப்பு வேலைகளைப் பொறுப்பு எடுக்க இராணுவம் தயார் நிலையில் வைக்கப்பட்டு இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-எ)

### 'எய்ட்ஸ்' நோய் பரப்பும் குரங்கு எது?

புதுடில்லி. டிச.4

மத்திய ஆபிரிக்காவில் உள்ள பச்சை நிற குரங்குகள் தான் 'எய்ட்ஸ்' நோய் பரவக் காரணமா?

இவ்வினா புதுடில்லி ராஜ்ய சபைக் கூட்டத்தில் சுவாரஸ்யமான விவாதம் ஒன்றை எழுப்பியது.

தி. மு. க எம். பி. திரு. வி. கோபால சுவாமி:-

'மத்திய ஆபிரிக்காவில் உள்ள பச்சை நிறக் குரங்குகள் தான் எய்ட்ஸ் நோய் பரவக் காரணம் என்று அமெரிக்க நிபுணர்கள் கூறுகின்றனர். இது உண்மையா?

மார்க்ஸீய கம்யூனிஸ்ட் எம்.பி. திரு. மோஹனன்:-

அது திராவிடக் குரங்காக இருக்க வேண்டும்.

சபைத் தலைவரும் உப ஜனாதிபதியுமான திரு. ஆர். வெங்கட்ராமன்:-

ஆரியக் குரங்குகளும் திராவிடக் குரங்குகளும் உள்ளன.

சுகாதார இணை அமைச்சர் செல்வி சரோஜ்:-

அமெரிக்க நிபுணர்கள் கூறுவதுபோல் மத்திய ஆபிரிக்காவில் உள்ள பச்சை நிறக் குரங்குகள் எய்ட்ஸ் வைரஸ் கிருமிகளைப் பரப்புகின்றன. (இ-எ)

## அ. தி. மு. க. எம். எல். ஏக்கள் இருவர் வெளியேற்றப்பட்டனர்

சென்னை, டிச. 4

கட்சிக் கட்டுப்பாட்டை மீறியதற்காக இரண்டு சட்டசபை உறுப்பினர்கள் அ. தி. மு க வில் இருந்து வெளியேற்றப் பட்டுள்ளனர்.

அ. தி. மு. க பொதுச் செயலாளரும் முதலமைச்சருமான திரு எம். ஜி. இராமச்சந்திரன் இதனை அறிவித்தார்.

இவர்கள் நீக்கப்பட்டதைத் தொடர்ந்து தமிழ்நாடு சட்டசபையில் அ. தி. மு. கவின் பலம் 132இல் இருந்து 130 ஆகக் குறைந்தது.

கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்ட எம் எல் ஏக்களில் திரு. தாமரைக்கனியும் ஒருவர். (இ - எ)

## நிக்கரகுவா எல்லையில் அமெரிக்க துருப்புக்கள் குவிப்பு

மனுகுவா, டிச.4

நிக்கரகுவா எல்லையில் அமெரிக்கத் துருப்புக்கள் பெரும் எண்ணிக்கையில் குவிக்கப்படுவதாக பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன.

ஹொண்டுராஸ் எல்லைக்கு வாகனங்களில் அமெரிக்கத் துருப்புக்கள் கொண்டுவரப்படுகின்றன.

இதனைக் காணக்கூடியதாக இருந்தது என்று எல்லைப்பகுதி மக்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தனர்.

முதலில் இதனை மறுத்த அமெரிக்கத் தூதரகப் பேச்சாளர் எல்லைப் பகுதியில் அமெரிக்கத் துருப்புக்கள் பயிற்சியில் ஈடுபட்டிருப்பதை ஒப்புக் கொண்டார். (இ-எ)

### வெளி உலகில்

### கேள்வி கேட்க தடை! ராஜினாமா!

ஹரியானா, டிச.4

இந்துக்கள் கொலை செய்யப்பட்டது குறித்து கேள்வி எழுப்ப ஹரியானா மாநில சட்டசபை சபாநாயகர் அனுமதி மறுத்ததைத்தொடர்ந்து இந்திரா காங்கிரஸ் எம் எல். ஏ. திரு. மகாஜன் ராஜினாமாச் செய்து விட்டார்

பதற்றநிலை அதிகரிக்கும் என்று கருதியே, கேள்வி எழுப்ப அனுமதி மறுக்கப்பட்டது என்று சபாநாயகர் தெரிவித்தார் (இ-எ)

### நிக்கரகுவா ஜனாதிபதி குற்றச்சாட்டு

மனுகுவா, டிச 4

நிக்கரகுவா எல்லையில் அமெரிக்கத் துருப்புக்கள் குவிக்கப்படுவது, அமெரிக்கா நேரடி யுத்தம் ஒன்றுக்கு தயாராகின்றது என்பதைக் காட்டுகின்றது.

இப்படி நிக்கரகுவா ஜனாதிபதி ஜெனரல் ஒட்டேகா குற்றஞ் சாட்டியிருக்கின்றார்.

இக்குற்றச்சாட்டை அமெரிக்க பாதுகாப்பு அமைச்சு மறுத்து உள்ளது. (இ-எ)

### ஈரான் ஆயுத விற்பனை பற்றி தமக்குத் தெரியும் என்கிறார் ஜோர்ஜ் புஷ்

வாஷிங்டன், டிச.4

ஈரானிய ஆயுத விற்பனை எனக்கு தெரிந்தே நடந்தது. அந்த வருமானம் நிக்கரகுவா கிளர்ச்சியாளருக்கு அனுப்பப்பட்டது பற்றி எனக்குத் தெரியாது

இப்படி அமெரிக்க துணை ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் இன்று அறிவித்தார்

ஈரானியப் பிரச்சினை குறித்து இதுவரை மௌனம் சாதித்து வந்த உப ஜனாதிபதி நேற்று முதன்முறையாக தனது கருத்தை வெளியிட்டார்.

ஈரானிய ஆயுத விற்பனை குறித்து முழு விவரங்களையும் அறிந்து கொள்ளும் அடிப்படை உரிமை, அமெரிக்க பிரசைகளுக்கு உண்டு.

இந்த நடவடிக்கையினால் அமெரிக்க நிர்வாகத்தின் மீது வைக்கப்பட்டிருந்த நம்பிக்கை பாதிப்பு அடைந்துள்ளது என்பதை ஏற்றுக் கொள்கின்றேன்.

இப்படி உப ஜனாதிபதி சொன்னார். (இ-எ)

### நிறைவேறியது

புதடில்லி, டிச 4

அணு ஆயுத உற்பத்தியை நிறுத்த வேண்டும் என்ற இந்தியாவின் பிரேரணை ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்தில் பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. (இ-எ)

# கணபதி தாள் பணிந்து விக்கினம் நீக்குவோம்

விநாயகரைச் சிறப்புடன் பூசிக்க உகந்த நோன்பு விநாயகர் விரதமாகும். இவ்விரதத்தை பிள்ளையார்கதை, பிள்ளையார் விரதம், பெருங்கதை விரதமெனவும் கூறுவர். இவ்விரதம் கார்த்திகை மாதத்துக் கிருஷ்ணபக்கம் பிரதமை



முதலாக மார்கழி மாத சஷ்டி இறுதியாகவுள்ள இருபத்தொரு தினங்களும் அநுட்டிக்கப்படுவதாகும். இவ்விரதத்தை அநுட்டிப்பவர் இருபது தினங்களும் ஒருபொழுது உண்டு, இறுதி நாளாகிய இருபத்தொராம் நாள் உபவாசமிருப்பர். அன்றைய தினம் பெருங்கதை என்னும் விநாயகருடைய சரித்திரங்களைக் கேட்டு, இளநீர், கரும்பு, மோதகம், அவல், எள்ளுருண்டை முதலான பொருள்களை நிவேதித்து

### ஞானக்கதிர்

விசேஷ ஆராதனை பண்ணுதல் மரபு. மேலும், இந்நாட்களிற் பிள்ளையார் ''பெருங்கதை'' படித்து விழா எடுப்பது வழக்கம்.

சாணத்தினால் அல்லது மஞ்சள் மாவினால் பிம்பம் செய்து அறுகம் புல் சாத்தி ஞானமுகல்வனாகிய விநாயகரை நினைத்து வழிபடுகின்றோம். இதனால் விநாயகப் பெருமான் எளிதாக வந்தருளும் தன்மை புலப்படுகிறது.

கலச பூசை, அங்க பூசை, அஷ்டோத்திர சதநாமம், புனர் பூசை உள்பட, எந்தச் சுப காரியமானாலும், முதலில் சுருக்கமாக பிள்ளையார் பூசை செய்தே ஆரம்பிக்கப் படுகின்றது.

பூசைகள் மட்டுமல்ல, ஒரு காரியத்தைப் பற்றி எழுதும்போது கூட விநாயகரை நினைத்து பிள்ளையார் சுழி எழுதியே ஆரம்பிக்கின்றோம். அதுமட்டுமல்ல, சகல காரியங்களையும் தொடங்கும் பொழுது கூட விநாயகரை வணங்கியே ஆரம்பிக்கின்றோம்.

இப்படியாகச் செய்தால் நாம் எடுத்த காரியம் இடையூறின்றி இனிது முடிவடையும் என்ற நம்பிக்கை நம்மிடையே உண்டு மேலும் வழிபடுகின்றவர்களுக்கு விக்கினங்களைப் போக்கும் எம்பெருமான் வழிபடாதவர்களுக்கு விக்

**நாளை பிள்ளையார்கதை நிறைவு**

கினங்களை உண்டாக்குவார் என்ற நம்பிக்கையும் நம்மிடையே இல்லாமல் இல்லை.

பாரதத்திலோ அல்லது ஈழத்திலோ கோயில் இல்லாத ஊர் இல்லை. அதே சமயம் விநாயகர் இல்லாத கோயிலும் இல்லை விநாயகர் கோயில் இங்கு மட்டுமல்ல நேபாளம், பர்மா, மலேயா, ஜாவா, சயாம், சீனா, ஜப்பான், மங்கோலியா, திபேத், கம்போடியா, ஆப்கானிஸ்தான் போன்ற இடங்களிலும் இருக்கின்றது.

நாடெங்கும் விளங்குகின்ற ஆலயங்கள் யாவற்றிலும் ஞான விநாயகர் தனியிடம் பெறுகின்றார். உற்சவங்கள் மகோற்சவங்களிலும் முதலிடம் பெறுகின்றார்.

நாம் எந்தக் கோயிலைத் தரிசிக்கச் சென்றாலும் முதலில் விநாயகப் பெருமானை வணங்கிய பின்புதான் மற்றைய தெய்வங்களைத் தரிசிக்கின்றோம்.

பெருமாள் கோயிலிலே தும்பிக்கையான் வாராக விநாயகர் பூசிக்கப்படுகின்றார்.

விநாயகர் வழிபாட்டிலே இன்னுமொரு விசேஷம் உண்டு. இதர வழிபாடுகளில் நாம் தெய்வத்தைக் கும்பிடுகின்றோம். கீழே சாஷ்டாங்கமாக விழுந்து வணங்குகின்றோம். ஆனால் இவைகளைக் காட்டிலும் விநாயகரை வழிபடும்போது இரண்டு கை முட்டிகளாலும் தலையில் நெற்றிக் கோடியில் குட்டிக் கொள்கிறோம்;

தோப்புக்கரணம் போடுகின்றோம். நமஸ்காரத்தை விட விநாயகருக்கு இவை இரண்டுமே அதிகப்பிரியமானவை என்று சொல்லப் படுகின்றது.

விநாயகரின் திருவுருவம் பஞ்சபூதங்களைத் தன்னுள் கொண்டவர் என்பதையே விளக்குகிறது. மடித்து வைத்துக் கொண்டுள்ள பாதங்கள் பூமியையும், தொந்தி நீரையும், மார்புப்பகுதி நெருப்பையும், இரு புருவங்களும் சேர்ந்த அரை வட்டப் பகுதி காற்றையும், அதன் நடுவே உள்ள வளைந்த கோடு ஆகா

**த. காசிநாதன்**

யத்தையும் குறிப்பதாகும்.

விநாயகனுக்கு ஐந்து கரங்கள் இருப்பதின் காரணத்தைத் திருத்தணிகை புராணம் இயற்றிய ஸ்ரீ கச்சியப்ப முனிவர் கீழ்க்கண்டவாறு விளக்குகின்றார்:

''ஒரு கையில் தமது உபயோகத்திற்காக கொழுக்கட்டையும், இன்னொரு கையில் பிறைச் சந்திரனைப்போல தந்தக் கொம்பும், வியக்கரமாகிய துதிக்கையில் தாய் தந்தையராகிய பார்வதி பரமேச்வரர்களைப் பாத பூஜை செய்வதற்காக ... மற்றைய வலது இடது ... அங்குசமும் பாசமும் வைத்திருக்கிறார். அடியேனைத் துன்புறுத்துகின்ற ஆணவம் என்ற யானையைக் கயிற்றினால் கட்டி அங்குசத்தால் குத்தி என்னைத் துன்புறுத்தாமல் அடக்கியாள்கின்றார். எனவே தமக்கு ஒரு கை, தேவர்களைத் துன்புறுத்தி வந்த கஜமுகாசுரனை சம்கரிக்கும் பொருட்டு தேவர்களுக்குதவியாக ஒரு கை, மாதா, பிதாக்களுக்காக ஒரு கை, உபயோகமற்ற என்னைக் காப்பதற்கு இரு கரங்களும் உள்ளன.

விநாயகர் விரதங்களை அன்போடு அனுட்டிப்பவர்கள் அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கினையும் பெறுவர் விநாயகருக்கு மிகவும் பிரியமான பத்திரம் (இலை) வன்னி பத்திரம். வன்னி பத்திரம் அறுகம் புல் கொண்டு அர்ச்சனை செய்தால் அதற்கான பலன் ஏராளம் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. (ஒ)


### பொய்யாமொழி

குறள்:

நிலைஅஞ்சி நீத்தாருள் எல்லாம் கொலை அஞ்சிக்
கொல்லாமை சூழ்வான் தலை.

பொருள்:

வாழ்க்கையின் தன்மையைக் கண்டு அஞ்சித் துறந்தவர்கள் எல்லாரிலும், கொலை செய்வதற்கு அஞ்சிக் கொல்லாத அறத்தைப் போற்றுகின்றவன் உயர்ந்தவன்.



### சமய நந்திகளில்

### சிவன் ஆலய புனருத்தாரண வேலைகள்

மானிப்பாய், டிச. 5

உடுவில் ஆலடியில் உள்ள சிவன் ஆலய புனருத்தாரண வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

சுற்றுமதில், மண்டப வேலைகள் ஆரம்பிக்கப் படவுள்ளன.

ஆலயத்தின் திருமஞ்சனக் கிணறு தோண்டப்பட்டு வருகிறது.

கோவில் பரிபாலன சபையினர் ஆலயத்தின் வேலைகளை பூர்த்தி செய்வதில் ஆர்வமுடன் இயங்கி வருகின்றனர். (இ-90)

## திருவாசக விழா

யாழ்ப்பாணம், டிச. 5

திருக்கேதீச்சரம் திருவாசக மடத்தில் 8ஆம் திகதி திங்கட்கிழமை முதல் 16ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை நடைபெற உள்ள திருவெம்பாவை நாட்களில் ஈழத்துச் சிவனடியார் திருக்கூட்ட ஆதரவில் வழமைபோல சாதனையும் திருவாசக விழாவும் நடைபெறும்.

தொடர்ந்து இருபத்தைந்தாவது வருடமாக நிகழும் இவ் விழாவின் முதல் ஆறு நாட்களும் சாதனை நாட்களாகவும் அடுத்த மூன்று நாட்களும் திருவாசகப் பெரு விழாவாகவும் அமையும்.

சாதனை நாட்களில் திருவெம்பாவை வீதி பஜனை, திருவாசகம் முற்றோதல், புராணபடனம், கூட்டுவழிபாடு, கருத்தரங்கு ஆகியன இடம் பெறும்.

சிவபூசை மாநாட்டுடன் தொடங்கும் திருவாசகப் பெருவிழாவில் சைவ சீலர்களும் பேரறிஞர்களும் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றுவர்.

பண்ணிசை வல்லார்கள் திருவாசக இன்னிசை வழங்குவர்.

பத்து நாட்களும் திருவாசகமடத்தில்மாகேசுர பூசையும் நடைபெற ஈழத்துச் சிவனடியார் திருக்கூட்டத் தலைவர் திரு. சரவணமுத்து சுவாமி ஒழுங்குகள் செய்துள்ளார் (இ)

## முல்லைத்தீவில் உள்ள அகதிகளுக்கு தொடர்ந்தும் நிவாரணம் வழங்க கோரிக்கை

உதவி மறுக்கப்பட்டு நிர்க்கதிக்கு ஆளாகியுள்ள நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் வாழும் அகதிகளுக்கு தொடர்ந்து நிவாரணம் வழங்க அரசாங்கம் முன்வரவேண்டும்.

இப்படி முல்லைத்தீவு அகதிகள் புனர்வாழ்வுக் கழகத் தலைவர் திரு. சோ. பாலகிருஷ்ணன் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

அவர் அந்த வேண்டுகோளில் மேலும் கூறியிருப்பதாவது:

சுமார் எண்ணூறு குடும்பங்களைச் சேர்ந்த நாலாயிரத்துக்கு மேற்பட்டோர் முல்லைத்தீவு நகர், அளம்பில், தண்ணீரூற்று, முள்ளியவளை, முள்ளி வாய்க்கால், குமுழமுனை ஆகிய இடங்களில் உள்ள அகதி முகாம்களில் தஞ்சமடைந்துள்ளனர்.

திருமலை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் தான் உடைமைகளை இழந்து இப்படி அகதிகளாக வந்துள்ளனர்.

அரசாங்கம் இவர்களுக்கு நிவாரணம் வழங்குவதை கடந்த அக்டோபர் மாதத்துடன் நிறுத்தி விட்டது. சுமுக நிலை திரும்பி விட்டது என்றும் சொந்த இடங்களுக்குத் திரும்பிச் செல்லலாம் என்றும் அரசு கூறுகின்றது. நிலைமை இதற்கு எதிர்மாறாக உள்ளது.

இப்படி திரு. பாலகிருஷ்ணன் தனது வேண்டுகோளில் வலியுறுத்தி உள்ளார். (இ-எ)

### கோரம் இல்லை

கிளிநொச்சி, டிச. 5

வட்டக்கச்சி மகாவித்தியாலயத்தில் நடைபெறவிருந்த வட்டக்கச்சி மேற்கு கிராம முன்னேற்றச் சங்க விசேட கூட்டம் கோரமின்மையால் தடைப்பட்டது. (இ - 76)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ருடியோ வீனஸ்
சிறந்த விடியோ படப்பிடிப்பாளர்கள்
266 / 1 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

# உதயன்

05 12 · 1986 வெள்ளிக்கிழமை

ஸ்ருடியோ வீனஸ்
சிறந்த கலர், கறுப்பு - வெள்ளை படப்பிடிப்பாளர்கள்
266 / 1 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

## உடுப்பிட்டியில் நகை, பணம் கொள்ளை

### முகமூடித் திருடர் கைவரிசை

வல்வெட்டித்துறை, டிச. 5

உடுப்பிட்டியில் உள்ள நகைக் கடைக் கணக்காளர் ஒருவரின் வீட்டில் இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான நகைகளும், 25 ஆயிரம் ரூபா பணமும், கொள்ளையடிக்கப்பட்டன.

புதன் கிழமை இரவு எட்டு மணி அளவில் இச் சம்பவம் நடந்தது

இனந் தெரியாத ஏழு முகமூடித் திருடர்கள் ஆயுதங்களுடனும், கைக்குண்டுகளுடனும் இவரது வீட்டினுள் புகுந்து இக் கொள்ளையை நடத்தினர் என்று தெரியவருகிறது.

கொள்ளையருடன் வாக்குவாதப்பட்ட வீட்டுக்காரர் ஏன் வீட்டிற்குள் புகுந்தீர்கள் எனக் கேட்டபோது நாங்கள் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்று கொள்ளையர்கள் தெரிவித்தனராம்.

முன்பு அச்சுவேலியில் நடைபெற்ற ஒரு கொலை கொள்ளைச் சம்பவத்தையும் ஞாபகப்படுத்தி சத்தம் போட்டால் கொலை செய்யப் போவதாகவும் கொள்ளையர் பயமுறுத்தினார்களாம். (இ-160)

## இராணுவ முகாமுக்கு அருகில் அகதிகள் முகாம்களை இடம்மாற்ற முயற்சி

யாழ்ப்பாணம், டிச 5

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள தமிழ் அகதி முகாம்களை பாதுகாப்புப்படையினரின் முகாம் களுக்கு அருகில் இடம்மாற்ற பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கை எடுத்து வருவதாக தெரிய வருகிறது.

இந்த வகையில் குச்சவெளி, கன்னியா, பன்குளம் பகுதிகளில் உள்ள அகதி முகாம்களை முதலில் அந்தந்தப் பகுதி பாதுகாப்புப் படை முகாம்களுக்கு அருகில் இடம் மாற்றப்படும்.

இந்த அகதி முகாம் ஒவ்வொன்றிலும் சுமார் ஐநூறுபேர் வரை தங்கிஉள்ளனர். (இ-10)

## இணுவிலில் கலை நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், டிச. 5

இணுவில் மக்கள் கலை அரங்கம் இருவாரங்களுக்கு ஒரு தடவை கலை நிகழ்ச்சிகளை நடத்த உள்ளது.

இதன் பிரகாரம் நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அருணை இசைக் குழுவினரின் 'எழுச்சிக் கீதங்கள்' மெல்லிசை நிகழ்ச்சியும். திரு வே. நவரத்தினம் வழங்கும் வெடிப் புழுகும் நடைபெறவுள்ளன (இ-10)

## இராமநாதன் கல்லூரி நிறுவுநர் விழா

யாழ்ப்பாணம், டிச. 5

இராமநாதன் கல்லூரி நிறுவுநர் நினைவு விழா நாளை சனிக்கிழமை சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் காலை நடைபெறும்.

நிறுவுநர் நாள் உரையை சிவத்தமிழ்ச் செல்வி, துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி நிகழ்த்துவார்.

சமாதி ஆலயத்தில் அபிஷேகமும் நடைபெறும். (இ-எ)

## மூளைக்காய்ச்சல் 10 பேர் பலி!

யாழ்ப்பாணம், டிச. 5

மூளைக்காய்ச்சல் காரணமாக அனுராதபுரம் புத்தளம் சிலாவத்துறை ஆகிய பகுதிகளில் பத்துப்பேர் வரையில் இறந்துள்ளனர்.

'டியுலக்ஸ்' என்ற நுளம்பின் காரணமாகவே இக் காய்ச்சல் வேகமாக பரவத் தொடங்கி உள்ளது என்று கூறப்படுகிறது (இ-10)

## தராசு, படிகளுக்கு முத்திரையிடும் வேலைக்கு ஒத்துழைப்பு வழங்குக

### ஈ- பி-ஆர். எல். எவ். கோரிக்கை

யாழ்ப்பாணம், டிச. 5

கோப்பாயில் நேற்று ஆரம்பமான தராசு, படிகள் ஆகியவற்றுக்கு முத்திரையிடும் வேலைகளுக்கு சகல வர்த்தகர்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்

இவ்வாறு ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் விலைக் கட்டுப்பாட்டு கண்காணிப்புக் குழு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக ஈ. பி. ஆர். எல். எவ். விடுத்த அறிக்கை ஒன்றில்,

இம்மாதம் 4-ம் திகதி தொடக்கம் 16-ம் திகதி வரை கோப்பாய் உதவி அரசாங்க பிரிவு பணிமனையில் கோப்பாய் வர்த்தக ஸ்தாபனங்களின் அளவை, நிறுவை கருவிகள் ஒழுங்கானவை என்பதை உறுதிப்படுத்தி முத்திரையிடும் வேலைகள் நடைபெறும் என உதவி உணவு ஆணையாளர் அறிவித்துள்ளார்.

பாவனையாளர் தாம் கொடுக்கும் பணத்திற்கு சரியான அளவு பொருள்களை பெற்றுக் கொள்கிறார்களா? என்பதை உறுத்திப்படுத்தவும், வர்த்தகர்கள் தமது கருவிகள் ஒழுங்கானவையா என்பதை தெரிந்து கொள்ளவும், நடத்தப்படும் இம் முத்திரையிடலுக்கும் கோப்பாய் உதவி அரசாங்க பிரிவில் அமைந்திருக்கும் சகல வர்த்தக ஸ்தாபனங்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

இப்படி அறிக்கையில் கோரப்பட்டுள்ளது (இ)

## சுலோகங்கள்

யாழ்ப்பாணம், டிச 5

பல்கலைக்கழக மாணவரின் நேற்றையபாதயாத்திரையின்போது; எடுத்துச் சொல்லப்பட்டு கோஷிக்கப்பட்ட சுலோகங்கள் வருமாறு.

'படிப்பதற்காக போராடுவோம் போராட்டத்திற்காகப் படிப்போம்', 'பொய்களைத் தகர்த்து உண்மைகளை வெளிக்கொணர்வோம்'. இயக்கங்களே எமக்கு எழுத்துரிமை பேச்சுச் சுதந்திரம் தாருங்கள்'.

'இயக்கங்களே மாணவர் அடிப்படை உரிமைகளை அங்கீகரியுங்கள்'. (இ-5)

## ஜெயவர்த்தன காரியவாதியாம்

### ஆனந்தவிகடன் சொல்கிறது

"காரியவாதி ஜெயவர்த்தன!" என்ற தலைப்பில் ஆனந்த விகடன் வார சஞ்சிகை தனது நவம்பர் 23 இதழில் ஆசிரியர் தலையங்கம் எழுதியிருக்கிறது

தலையங்கம் வருமாறு: பெங்களூரில் நடந்த தெற்காசிய நாடுகள் மாநாட்டை முழுக்க முழுக்கத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார் கெட்டிக்காரரான ஜெயவர்த்தன!

'நான் ரொம்ப நல்லவன்' என்று சாதிக்க அருமையான மேடை கிடைத்தது அவருக்கு! கிடைத்த சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்திக் கொண்டு முதலைக் கண்ணீர் வடித்திருக்கிறார்!

புத்தர், காந்தி ஆகியோரின் அஹிம்சை வழியில் நம்பிக்கை உள்ள வராம் அவர்! காந்தி சம்பந்தப்பட்ட ஒரு நிகழ்ச்சியை உதாரணம் காட்டியிருக்கிறார் ஜெயவர்த்தன

தனது போராட்டம் ஒன்று வன்முறையாக மாறியபோது, அந்தப் போராட்டத்தையே காந்தி வாபஸ் பெற்றதை நினைவுபடுத்தி இருக்கிறார். அந்த அடிப்படையில் தான் இவர் வன்முறையை ஏற்க மறுக்கிறாராம்!

அடடா ...! என்ன நியாயமான வாதம்! அதனால் தான் ஹிட்லர் பாணியில் ராணுவ சித்திரவதை முகாம்களை நிறுவி தமிழ் இளைஞர்களை வதைக்கிறார் போலும்!

பயங்கரவாதிகளை ஒடுக்குவதாகச் சொல்லிக் கொண்டு இலங்கை ராணுவம் நூற்றுக்கணக்கான அப்பாவித் தமிழர்களை இனப் படுகொலை செய்வதை இவர் தடுத்து நிறுத்த உத்தரவு போட்டது உண்டா?

ஐ நாவின் ஓர் அமைப்பே ஈழத்தமிழர் இனப் படுகொலையின் கோரத்தைக் கண்டித்தும் அதைக் கண்டுகொள்ளாத அளவுக்கு 'அஹிம்சைத் திலகம்' ஆயிற்றே ஜெயவர்த்தன!

தன்னை ஏதோ மகாத்மா போலவும், நியாயமான உரிமைகளுக்காகப் போராடும் ஈழத் தமிழர்களைக் கொடிய வன்முறையாளர்கள் போலவும் சித்திரிக்க இந்த மாநாட்டில் படாதபாடு பட்டிருக்கிறார் ஜெயவர்த்தன!

இந்திய மக்கள் நம்புகிறார்களோ, இல்லையோ, நாடகமாடிப் பார்த்து விடலாம் என்பது அவர் கணிப்பு. அனுதாபம் கிடைத்தால் அவருக்கு லாபம் தானே! கிடைக்கவில்லை என்றால் புதிதாக நஷ்டம் ஒன்றும் இல்லையே!

காரியவாதி ஜெயவர்த்தனவின் இரட்டை வேடம் நமக்குப் புதிதல்ல! பெங்களூரில். அவர் நிகழ்த்திய சாகசம் தான் புதுமாதிரியானது

இப்படி 'ஆனந்தவிகடன்' தனது ஆசிரியர் தலையங்கத்தில் கூறியிருக்கிறது. (இ-எ)

## விஜே குழுவினர் யாழ்---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நள்ளிரவே திரு விஜய குமாரணதுங்க, பேஜோ' காரில் கொழும்பு விரைந்தார்.

நேற்றுப் பகல் ஜனாதிபதி ஜெயவர்த்தனவையும் தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலியையும் அவர் சந்தித்துப் பேசினார்.

இப்பயணத்தை மேற்கொள்ளுபவர்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் கொடுக்கமுடியாது என்ற சாரப்பட ஜனாதிபதியும்பாதுகாப்பு அமைச்சரும் திரு. குமாரண துங்காவிற்குத் தெரிவித்தனர் என்று அறியவருகின்றது.

எனது பாதுகாப்புக்கு நானே பொறுப்பு அரச பாதுகாப்புத் தேவையில்லை — என்று திரு. குமாரணதுங்கா பதிலளித்ததாகவும் பின்னர் இதனை எழுத்து மூலம் கொடுத்ததாகவும் தரியவருகின்றது.

அதன்பின்னர் யாழ்ப்பயணத்தைத் தொடர திரு குமாரணதுங்கவிற்கு அனுமதி வழங்கப்பட்டது

பயணத்துக்கு தடைவிதிக்கவேண்டாம் என்று தான் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு அறிவிப்பதாகவும் இச்சந்திப்பின் போது ஜனாதிபதி தெரிவித்தார் என்றும் அறிய வருகின்றது.

இதைத் தொடர்ந்து திரு. குமாரணதுங்கா, கொழும்பில் இருந்து மீண்டும் நேற்று நண்பகல் அளவில் அனுராதபுரம் புறப்பட்டார். இன்று காலை அனுராதபுரத்தில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணம் ஆரம்பமாகும் என்று கொழும்பில் தெரிவிக்கப்பட்டது

அனுராதபுரம் நகரில் இருந்து சற்றுத் தொலைவில் உள்ள பௌத்த விகாரை ஒன்றில் பௌத்த மத குருமார்கள். பத்திரிகையாளர்கள், புலிகளினால் சிறை வைக்கப் பட்டுள்ள சிப்பாய்களின் பெற்றோர்கள் ஆகியோர் நேற்றிரவு தங்கி இருந்தனர். (அ-ஐ-எ)

## வணபிதா--

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மறைவு குறித்து நம்பக்கூடிய விளக்கங்கள் இலங்கை அரசிடம் இருந்து இன்று வரை கிடைக்கவில்லை. பாரபட்சமற்ற சுதந்திர விசாரணையோ நடத்தப்படவில்லை.

ஆனால் கடந்த அக்டோபரில் வெகுஜன தொடர்பு நிலையத் தலைவர் இது குறித்து ஒரு கருத்து வெளியிட்டிருக்கிறார்.

பாதுகாப்புப்படையினரின் துப்பாக்கிப் பிரயோகத்தின் போது வங்காலை தேவாலயத்தில் இருந்து பலர் கடற்கரையை நோக்கி ஓடினார்கள் என்றும் கடலில் நின்றுகொண்டிருந்த வள்ளம் ஒன்றில் சிலர் சென்றனர் என்றும், வங்காலைச் சம்பவத்தில் உயிரிழந்த 8 பேரின் மரண விசாரணையில் தெரிவிக்கப்பட்டதாக அரசுப் பேச்சாளர் கூறியிருக்கிறார்

இதன்படி அப்படி வள்ளத்தில் ஏறித் தப்பியவர்களில் வணபிதா பஸ்தியனும் ஒருவர் என்பதை அரசாங்கம் மறைமுகமாக தெரிவிப்பது போல் உள்ளது

இந்தக் கருத்துக்கு ஆதாரமாக சாட்சியங்கள் எதுவும் சர்வதேச மன்னிப்புச் சபைக்குக் கிடைக்கவில்லை.

மரணவிசாரணை அறிக்கையின் பிரதி ஒன்றை அனுப்பி வைப்பதாக அக்டோபர் 20 இல் வெகுஜனதொடர்பு நிலையத் தலைவர் அறிவித்தார். ஆனால் இன்னும் அந்த அறிக்கை சபைக்குக் கிடைக்கவில்லை.

அரசாங்கம் கூறும் மரணவிசாரணை, கண்டுபிடிக்கப்பட்ட எட்டு சடலங்கள் குறித்து நடைபெற்றதே ஒழிய காணாமற் போனதாகக் கூறப்படும் வண பிதா பஸ்தியன் பற்றியது அல்ல.

கத்தோலிக்க பிஷப் மாநாடு கோரியும் கூட இது பற்றிய அறிக்கையை அரசு வெளியிடாதது சபைக்குக் கவலை தருகிறது

வண பஸ்தியன் அவரின் இல்லத்தில் வைத்து படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டார் என்று கூறும் சாட்சியங்கள் உள்ளன

இப்படி சர்வதேச மன்னிப்புச் சபை கூறியுள்ளது (இ-எ)

## தொலைத்---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சென்றுவருவர்.

மக்களுடன் தொடர்புடைய சகல அலுவலகங்களும் வேறு ஓர் இடத்துக்கு இடம்மாற்றம் செய்யப்படும்.

அதுவரை ஏலைய ஊழியர்கள் கொட்டடியில் உள்ள பொறியியலாளரின் இல்லத்தில் தமது வரவைப் பதிந்துகொள்ளலாம்.

மேற்கண்ட தீர்மானங்களே அங்குநிறைவேற்றப்பட்டன. (இ 10)

## சாவோதய---

(1ஆம்பக்கத்தொடர்ச்சி)

யம் அடைந்தனர்.

அவர்கள் பெயர் விவரங்கள் வருமாறு;

எஸ் கந்தவனம், வயது 25. எஸ் ஐங்கரன் வயது 21, கே. கதிர்காமத்தம்பி, வயது 77.

மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் இவர்கள் அனுமதிக்கப்பட்டனர். (இ-எ-21)

## கிளிநொச்சி---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தோற்றுதல் வேண்டும்.

கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் பரீட்சைக்குத் தோற்ற இருந்த கிளிநொச்சி மகாவித்தியாலயம், கனகபுரம் அ. த. க. பாடசாலை, அக்கராயன் மகாவித்தியாலயம், கனகாம்பிகைக்குளம் அ. த. க. பாடசாலை ஆகியவற்றைச் சேர்ந்த பரீட்சார்த்திகள் கிளிநொச்சி இந்து மகாவித்தியாலயத்தில் அமைந்த இரண்டாம் இலக்க பரீட்சை மண்டபத்துக்குச்செல்லுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (இ-10)

## வவுனியா---

(1ஆம்பக்கத்தொடர்ச்சி)

தொடர்ந்து யாழ் சென்றீர்களானால் படையினரால் கைது செய்யப்படுவீர்கள்" — என்று வண. சியம் பலகஸதேவ தேரர் அவர்களிடம் தெரிவித்தார் என்று அறியப்படுகிறது.

அதைத் தொடர்ந்து சுமார் பதினொரு மணியளவில் அவர்கள் அனுராதபுரம் திரும்பினர் அவர்களுடன் ஸ்ரீ லங்கா மக்கள் கட்சி உதவிச் செயலாளர் ஒஸி அபயகுணசேகர வந்திருந்தார்.

பின்னர் அவர்கள் வாடி விடு சென்று சிற்றுண்டி அருந்திவிட்டு பதினொரு மணியளவில் அனுராதபுரம் திரும்பினர் (அ-எ-10)

## 1915க்குப் பின் நிகழ்ந்த பெரிய கலவரம் 1983 ஜூலை கலவரம்

### தீர்ப்பு வழங்குகையில் நீதிபதி

கொழும்பு, டிச 5

1915இல் இடம்பெற்ற முஸ்லிம் - சிங்கள கலவரத்துக்குப் பின்னர் இடம்பெற்ற பெரிய கலவரம் 1983 ஜூலைச் சம்பவம் ஆகும்.

1956இன் பின்னர் உருவான நிகழ்வுகள் தான் 1983 கலவரத்துக்கு வித்திட்டன

இப்படி கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி எச். டபிள்யூ சேனநாயக்கா தெரிவித்தார்.

1956இன் பின்னர் இடம்பெற்ற நிகழ்வுகள் தவிர்க்கப்பட்டிருப்பின் இன்றைய நிலை இரண்டு இனங்களுக்கு இடையே ஏற்பட்டிருக்காது.

இன்று இடம்பெறும் மோதல்களில் அப்பாவி மக்கள் உயிரிழக்கின்றனர்

இப்படி மேல்நீதிமன்ற நீதிபதி சொன்னார்.

1983 ஜூலையில் கிரிலப்பனையில் மூன்று தமிழர்களின் வீடுகளை எரித்தது, சூறையாடியது ஆகிய குற்றச்சாட்டுக்களின் மீது குற்றவாளியாகக் காணப்பட்ட இரண்டு எதிரிகளுக்குச் சிறைத் தண்டனை வழங்கித் தீர்ப்பு அளித்தார்.

அச் சமயம் தான் நீதிபதி மேற்கண்ட கருத்துக்களை வெளியிட்டார்.

ஒவ்வொரு எதிரி மீதும் ஏழு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருந்தன.

ஏழு குற்றச்சாட்டுக்களிலும் அவர்கள் குற்றவாளியாகக் காணப்பட்டனர்

ஒவ்வொரு குற்றச்சாட்டுக்கும் தலா 5 வருட சிறை விதிக்கப்பட்டது. ஏக காலத்தில் சிறைத் தண்டனைகளை அனுபவிக்கும்படி எதிரிகளுக்கு உத்தரவிடப்பட்டது. (இ-ஐ-எ)

## அயல் நாடுகளில் ஆயுதங்கள் குவிப்பு

### கூடிய கண்காணிப்பு தேவை என்கிறார் ராஜீவ் காந்தி

புதுடில்லி, டிச. 4

அயல் நாடுகளில் நவீன ஆயுதங்கள் குவிக்கப்படுவதினால் நாம் கூடிய கண்காணிப்பும் அக்கறையும் எடுக்கவேண்டி உள்ளது.

இந்தியக் கடற்படைத் தினத்தை ஒட்டி விடுத்த செய்தியில் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி மேற்கண்டவாறு கூறி இருக்கின்றார்.

இந்தியத் துணைக் கண்டத்தில் உருவாகி வரும் சவாலை எதிர் நோக்கும் வீரம், துணிவு, அர்ப்பணிக்கும் தன்மை கடற்படைக்கு உண்டு என்பது எனது நம்பிக்கை என்றும் பிரதமர் தனது செய்தியில் தெரிவித்திருக்கிறார்.

அதே சமயம் கடற்படை பாதுகாப்பில் மட்டுமல்ல. கடலோர நடவடிக்கைகளையும் பாதுகாக்க வேண்டியுள்ளது என்று ஜனாதிபதி ஷெயில் சிங் தனது செய்தியில் தெரிவித்தார்.

பாதுகாப்பு இணை அமைச்சர்களான சுவரூப்படேல், அருண்சிங் ஆகியோர் தங்கள் செய்தியில்,

நாட்டின் பாதுகாப்புக்கு கடற்படை தயார் நிலையில் இருக்க வேண்டும் என்று தெரிவித்தனர் (இ-எ)

## சைக்கிள்கள் மீட்பு

யாழ்ப்பாணம், டிச, 5

பொதுமக்களிடம் இருந்து களவாடப்பட்ட மேலும் எட்டு சைக்கிள்களை தமிழீழ விடுதலைப் புலிகள் மீட்டுள்ளனர்,

அவற்றின் விவரம் வருமாறு;

003 ஏ. பி. 7068 ஏசியா, ஏ. 421676 ஹீரோ, 57085 இந். டி. ஈ. 78444 ரலி, 007 ஏ. பி. 2793 ஏசியா, வி. எச். 69663 ஹீரோ

மற்றும் இரண்டு சைக்கிள்கள் இலக்கம் அழிக்கப்பட்ட நிலையில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. (இ-10)

## அரசாங்கம்---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஐம்பதுக்கு அதிகமான கண்டனக் கூட்டங்களை நடத்துவது.

★ இந்த ஊழல் பற்றி காமன் வெல்த் அமைப்பு நாடுகள், ஜனநாயக ஆட்சி உள்ள நாடுகள், இலங்கைக்கு நிதி உதவி செய்யும் நாடுகள் ஆகியவற்றிற்கு அறிவிப்பது.

மேற்கண்ட நடவடிக்கைகளைச் செயல் படுத்துவதற்கு விசேட குழு ஒன்றும் கூட்டத்தில் நியமிக்கப்பட்டது. (அ-எ)

## விநாயக விரத விழா

யாழ்ப்பாணம், டிச. 5

புன்னாலைக்கட்டுவன் ஈவினை அருள்மிகு விநாயகர் ஆலயத்தில் நாளை சனிக்கிழமை காலை விநாயகப் பெருமானுக்கு விசேஷ அபிஷேக ஆராதனையும் வழிபாடும் நடைபெறும். (இ)

## பாதயாத்திரை---

னங்கை வீதிவழியாக உரும்பராயை நேற்று அடைந்தது.

இன்று உரும்பராயிலிருந்து பாதயாத்திரை மீண்டும் ஆரம்பமாகும்.

மாணவர்கள் செல்லும் இடங்களில் இரவில் தங்கவும், உணவு வசதிகளைச் செய்யவும், பொதுக் கூட்டங்களை நிகழ்த்தவும் வெகுஜன அமைப்புக்கள் உதவி செய்ய முன்வந்துள்ளன.

நேற்று பல்கலைக்கழகத்தில் வெகுஜன அமைப்புக்களுடன் மாணவர் அமைப்புக்குழு ஒரு சந்திப்பை நடத்தியது. (இ-5)

## மரண அறிவித்தல்

### திருமதி நாகம்மா நாகநாதி

புங்குடுதீவு மேற்கு 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்டவரான

திருமதி நாகம்மா நாகநாதி காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி நாகநாதியின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற ஐயம்பிள்ளை அன்னபூரணிப்பிள்ளையின் அன்பு மகளும், நாகேஸ்வரி(ஜேர்மனி), நவரத்தினராஜா (நவம்), நாகராஜா (கனடா), ராணி (பிரான்ஸ்), நகுலேஸ்வரன் (அமெரிக்கா), சரோஜாதேவி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், இராமச்சந்திரன் (ஜேர்மனி) புவனேஸ்வரி சித்திரா (கனடா), மகாலிங்கசிவம் (பிரான்ஸ்), அருளழகன் (ஜேர்மனி), ஆகியோரின் அன்பு மாமியாரும், அசோக், சைலா, ஆனந்த், பிரதாப், இந்துஷா, ரஜீவன், சர்மீளா ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார், அன்னாரின் பூதவுடல்

06-12-86 சனிக்கிழமை காலை 10 மணிக்கு 'அன்னை இல்லத்திலிருந்து' ஈமைக்கிரியைகளுக்காக கொக்குவில் இழக்கு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: நா. நவரெத்தினராஜா (நவம்)

"அன்னை இல்லம்"
ஆராய்ச்சியார் வளவு,
கொக்குவில் இழக்கு.
கொக்குவில்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மின்சார நிலைய வீதி, இரண்டாம் ஒழுங்கை 15 ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி: 05-12-1986

Printed and Published by Uthayan Publications (Private) Ltd 15 Second Lane Power House Road, JAFFNA Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka Under Number QJ 60 N 86. T'PhoneNo 24805, 22078.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org